*DEPOSITION OF WITNESSES*
*(Chapter XXIII code of Criminal Procedure)*
*IN THE COURT OF THE SESSION JUDGE, MAHILA COURT, PUDUKKOTTAI*

*S.C. NO : 01/2016*
*Deposition of Witness for PW- 13*

| | | | | |
|---|---|---|---|---|
| Name | திருமதி. எழிலரசி | : | Caste | |
| Fathers name | | : | Calling | |
| Village | | : | Religion | |
| Taluk | | : | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 19.09.2019.

**முதல்விசாரணை-**

நான் தற்போது புதுக்கோட்டை மாவட்டம் இலுப்பூர் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் தலைமை ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் ஆவணங்களுடன் ஆஜராகியுள்ளேன். பள்ளி ஆவணங்களின் படி எங்களது பள்ளியில் மூக்கன் மகள் மல்லிகா என்பவர் 2011-2012 கல்வியாண்டில் படித்துள்ளார். அவரது பள்ளி மாற்றுச்சான்றிதழின் அடிக்கட்டை பதிவேட்டை இன்றையதினம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியுள்ளேன். அதன்படி மேற்படி மல்லிகாவின் பிறந்ததேதி 13.01.1998. அசல் பதிவேட்டை ஒப்பிட்டு நான் இன்றையதினம் மேற்படி பள்ளி மாற்றுச்சான்றிதழின் நகலை தாக்கல் செய்கிறேன். சான்றிடப்பட்ட பள்ளி மாற்றுச்சான்றிதழ் நகல் அ.சா.ஆ.9.

**குறுக்குவிசாரணை:-**

என்னை போலீசார் விசாரித்தது கிடையாது. பள்ளி மாற்றுச்சான்றிதழில் உள்ள விவரங்கள் பெற்றோர் கூறுவதன் அடிப்படையில் பதிவு செய்யப்படுவது கிடையாது. ஏற்கனவே பள்ளியில் உள்ள சம்மந்தப்பட்ட மாணவரின் ஆவணங்களின் அடிப்படையில் பதிவு செய்யப்படும். இதற்கு முந்தைய பள்ளி மாற்றுச்சான்றிதழின் நகல் எதையும் நான் கொண்டுவரவில்லை.

**<u>மறு குறுக்குவிசாரணை</u>:-** எதுவுமில்லை.

*Taken down by me in open court*
*read over to the witnesses and*
*admitted by him/her to be correct.*

*Sessions Judge,*
*Mahila Court, Pudukkottai.*